[2005 மார்ச் 7

86—

மீன்பிடி படகுப் போக்குவரத்து

***59886—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில் கடற்கரையில் கலக்கும் உப்பனாற்றின் முகத்துவாரத்திலுள்ள மணமேடுகளை அகற்றி மீன்பிடி படகுப் போக்குவரத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருமுல்லைவாசல் மீன்பிடிப் பகுதியில் ஆற்று முகத்துவாரத்தில் உள்ள மணல்மேடுகளை அகற்றி, மீன்பிடி படகுப் போக்குவரத்தைத் தடையின்றி ஏற்படுத்திடும் பொருட்டு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், திருமுல்லைவாசல் மீன்பிடிப் பகுதியின் ஆற்று முகத்துவாரத்தில் பூண்டி நீரேற்றியல் மற்றும் நீரியல் மையத்தின் மூலம் மாதிரி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வறிக்கையின் அடிப்படையில் மணல்மேடுகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10-30

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரைக்கு நன்றி. சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியிலும், மற்றும் அருகிலுள்ள மீனவ கிராமங்களிலும் சுமார் 200-க்கும் மேற்பட்ட மீன்பிடிப் படகுகள் உள்ளன. இவற்றை நிறுத்துவதற்கு வசதி ஏதும் இல்லாததால் மீனவர்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். சமீபத்தில் ஏற்பட்ட சுனாமி பேரலையால், திருமுல்லைவாசல் கிராமத்தில் கடல் நீர் ஒரு கிலோ மீட்டர் தூரம் ஊருக்குள் புகும் காட்சிகளை நானே நேரில் சென்று வீடியோ படம் எடுத்ததை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் அனைவரும் ஜெயா டி.வி.-யில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

2005 மார்ச் 7]

பார்த்திருப்பீர்கள். சுனாமி பேரலையால் முகத்துவாரத்தில் மண்மேடுகள் அதிகமாக உருவாகிவிட்டன. மேலும், அருகில் இருந்த சுற்றுலாத் தலமும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, திருமுல்லைவாசல் மற்றும் பக்கத்து கிராமத்திலுள்ள மீனவ மக்கள் படகில் சென்று மீன் பிடிப்பதற்கு வசதியாக மண்மேடுகளை அப்புறப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்கவும், திருமுல்லைவாசல் மீனவ கிராமத்தில் படகு நிறுத்தும் தளம் ஒன்றும் அமைத்துக் கொடுத்தால், கடல் நீர் உட்புகாமல் தடுத்திடவும், மீனவ மக்கள் வசிக்கும் பகுதிக்குப் பாதுகாப்பு அளித்திட ஏதுவாகும். எனவே, திருமுல்லைவாசல் மீனவ கிராமத்தில் ஒரு படகு நிறுத்தும் தளம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமுல்லைவாசல் பகுதியில் மணல்மேடுகளை அகற்ற மாதிரி ஆய்வுகளை மேற்கொள்வதற்கு 21-12-2000 ஆம் நாளிட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறையின் அரசாணை எண் 184-ல், ரூபாய் 2.40 இலட்சம் வழங்கப்பட்டது. மாதிரி ஆய்வுகள் பூண்டி நீரியல் மற்றும் நீரேற்றியல் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளும்முன், Numerical Model Survey and Pathymetry Survey ஆகியவை செய்யப்பட வேண்டுமென்று பூண்டி நீரியல் மற்றும் நீரேற்றியல் நிறுவனம் பின்னர் தெரிவித்தது. எனவே, Numerical Model Survey and Pathymetry Survey ஆகியவற்றை மேற்கொள்ள, கூடுதலாக ரூபாய் 6.02 இலட்சம் வழங்க மீன் துறை இயக்குநர் அரசுக்குக் கருத்துரு அனுப்பியுள்ளார். இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. கூடுதலாகக் கோரப்படும் தொகை ரூபாய் 6.02 இலட்சம் ஒப்பளிக்கப்பட்ட பின்னர், மாதிரி ஆய்வுகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு, ஆய்வு அறிக்கையின் அடிப்படையில், திருமுல்லைவாசல் பகுதியிலே ஏற்படும் மணல்மேடுகளை நிரந்தரமாகத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றபோது, படகு நிறுத்தும் தளம் ஒன்று அமைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதியின் சார்பாக நன்றியினை, பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.